(**2025-26-**ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட (பக்கங்களின் எண்ணிக்கை : 2 )

மாணவ-மாணவியருக்கு மட்டும்) **SUBJECT CODE 25 PTM 207**

**REG.NO:**

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி**

பருவ இறுதித் தேர்வுகள் : மே - 2026

எம். ஏ. தமிழ் இலக்கியம் மதிப்பெண்கள் : 75

இரண்டாம் பருவம் நேரம் : 3 மணி

## நாட்டார் வழக்காற்றியல்

**பகுதி – அ** **(10x1=10** மதிப்பெண்கள்)

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (K1)

1. நாட்டார் வழக்காற்றியல் என்ற சொல்லை முதன்முதலில் பயன்படுத்தியவர் யார்?

   அ) வானமாமலை ஆ) ஜான் தாமஸ் இ) கிரிம்ஸ் ஈ) மாக்ஸ் முல்லர்

2. அமைப்பியல் என்ற கருத்தாக்கத்தை முதன் முதலில் வைத்த நாடு **எது?**

   அ) அமெரிக்கா ஆ) இங்கிலாந்து இ) ரஷ்யா ஈ) இந்தியா

3. பக்திப் பாடல்கள் _____________ இலக்கிய பண்புடையவை

   அ) பழங்கதை ஆ) உளவியல் இ) சமூகவியல் ஈ) வாய்மொழி

4. தாலாட்டு ____________ வகைச் சிந்துப் பாடல்களுள் ஒன்று

   அ) ஐந்து ஆ) ஏழு இ) ஒன்பது ஈ) பத்து

5. நாட்டார் உணவு முறை என்பது _________ வருபவை

   அ) நற்செயலாக ஆ) பழக்க வழக்கம் இ) மரபு வழியாக ஈ) இயல்பு

**கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.** (K2)

6. ‘Folk Lore’ என்ற சொல்லை உருவாக்கியவர் யார்? **எம்மொழியிலிருந்து** உருவாக்**கப்பட்டது?**

7. உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டை உருவாக்கியவர் யார்?

8. நாட்டுப்புறப் பாடல் **வகைகளுள்** இரண்டினைச் சுட்டுக.

9. நாட்டார் வழக்காற்றியலின் தந்தை யார்?

10. நாட்டார் கலைகள் இரண்டினை எழுதுக.

**பகுதி – ஆ ( 5 X 5 = 25 மதிப்பெண்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.** **(K3)**

11. அ) நாட்டுப்புற வழக்காறுகள் குறித்து விளக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) நாட்டாரின் கலைச் சொற்கள் குறித்து எழுதுக.

**(த.பி.பா.)**

12. அ) புராணவியல் கோட்பாட்டினை **தெளிவுபடுத்துக.**

**(அல்லது)**

ஆ) சூழலியல் கோட்பாட்டினை **எடுத்துரைக்க.**

13. அ) நாட்டார் வழக்காற்றில் மானிடவியலின் பங்கினைக் குறிப்பிடுக.

**(அல்லது)**

ஆ) நாட்டார் வழக்காற்றில் வரலாற்றின் பணியினை விளக்குக .

14. அ) தெம்மாங்குப் பாடல்களின் தன்மையினை விளக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) விடுகதைகளின் சிறப்பினை விளக்கி எழுதுக.

15. அ) பத்தமடைப் பாய் தயாரிக்கும் முறையினைக் குறிப்பிடுக.

**(அல்லது)**

ஆ) கைவினைக் கலையின் சிறப்பு குறித்து எழுதுக.

## பகுதி – இ ( 5 X 8= 40 மதிப்பெண்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K4/K5)**

16. அ) நாட்டுப்புறவியலின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து கட்டுரை வரைக.

**(அல்லது)**

ஆ) நாட்டார் **வழக்காற்றியலின்** எல்லையும் பரப்பும் குறித்து விரிவாக எழுதுக.

17. அ) வரலாற்று மீட்டுருவாக்கக் கோட்பாட்டினை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டினை விவரிக்க.

18. அ) நாட்டார் வழக்காற்றில் மொழியியலின் பங்கினைப் பட்டியலிட்டு விவரிக்க.

**(அல்லது)**

ஆ) நாட்டார் வழக்காற்றியலில் சமூகவியலின் பங்களிப்பு குறித்து விவரித்து எழுதுக .

19. அ) நாட்டார் கதைப் பாடல்களைச் சான்றுடன் விவரிக்க.

**(அல்லது)**

ஆ) **வாய்மொழி வழக்காறுகளுள் ஒன்றானப்** பழமொழிகளின் சிறப்பினைத் தொகுத்து எழுதுக .

20. அ) வில்லுப் பாடல்கள் உணர்த்தும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக .

**(அல்லது)**

**ஆ) நாட்டார் வழிபாடு குறித்து விளக்கி எழுதுக.**

**********************